செய்து, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

173—

குளிர்பதனக் கிடங்கு

***20291—திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லில் முட்டைகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாமக்கல்லில் உற்பத்தியாகும் முட்டைகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசின் வேளாண்மை விற்பனை மையத்தின் மூலமாக, நாமக்கல் மாவட்டத்திலே பரமத்திவேலூர், உஞ்சனை மற்றும் நாமகிரிப்பேட்டை ஆகிய இடங்களிலே குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களாலே கடந்த 27–6–2014 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன. அக்கிடங்குகளிலே முட்டைகளைப் பாதுகாப்பாகக் குளிர்பதன நிலையில் சேமித்து வைத்துப் பயன்பெறலாம். எனவே, நாமக்கல்லில் தனியாகக் குளிர்பதனக் கிடங்கு அமைக்க தற்போது அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், N.E.C.C.-National Egg Co-ordination Committee மூலமாக 12,000 டன் கொள்ளளவுக் கொண்ட முட்டை சேமிப்புக் கிடங்கு ஒன்றும் நாமக்கல் மாவட்டம், ரெட்டிப்புதூரில் கட்டி

2014 ஜூலை 17]

முடிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது நாமக்கல்லில் புதியதாகக் குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.*

திரு. கே.பி.பி. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர், தமிழ்நாட்டின் முதலமைச்சர், இந்தியாவின் முன்னோடி, 7 கோடி தமிழர்களின் ஒற்றை உயிர், எங்கள் குடும்ப குலதெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.*

நாமக்கல் பகுதியில் தினமும் 3 கோடியே 40 இலட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை யாவும் வளைகுடா மற்றும் பிற நாடுகளுக்கும், இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. முட்டையின் தேவை குறையும்பொழுது, அதைக் குளிர்பதனக் கிடங்குகளில் சேமித்து வைத்து, விலை அதிகரிக்கும்போது முட்டைகளை விற்பனை செய்தால், இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பண்ணையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்வதற்கு இந்தக் குளிர்பதனக் கிடங்கு மிகப் பயனுள்ளதாக இருக்கும். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மக்களின்மேல் கருணை கூர்ந்து, நாமக்கல் பகுதியின் அருகிலேயே முட்டைகளைச் சேமித்து வைக்க, குளிர்பதனக் கிடங்கு அமைத்துக்கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல் உண்மைதான். இருபது நாட்களுக்கு முன்புதான், மூலமாக மூன்று புதிய கிடங்குகள் அமைக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய*

பொற்கரங்களாலே திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், N.E.C.C.- மூலமாக ஒரு புதிய முட்டை சேமிப்புக் கிடங்கு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு கிடங்குகளும் போதவில்லை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.*

திரு. கே.பி.பி. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

174—

விட்டுமனைப் பட்டா

***20305—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் வடக்கு தொகுதி, 6 மற்றும் 12-வது டிவிஷன்களிலுள்ள ஆதி திராவிட இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் வட்டம், சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 12-வது டிவிஷன்